**பாணந்துறை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாணந்துறை பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய வேலைக் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 2,315,137 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,179,333 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக வேலைக் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 135,804 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மூலதனச் செலவினங்களும் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 176,100 பெறுமதியான C.C.T.V கெமரா மூலதனமாக்கப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் முறையே ரூபா 176,100 வீதம் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கெஸெல்வத்த பொதுச் சந்தைக்கு மின்சார பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 274,250 தொகை மீண்டெழும் செலவின விடயத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், செலவின விடயம் 509 இன் கிழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 45,540 பெறுமதியான மின்விசிறி மற்றும் ரூபா 16,000 பெறுமதியான UPS இயந்திரம் என்பன மூலதனமாக்கப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன ரூபா 61,540 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்காக வழங்கல் மற்றும் உபகரணச் செலவினம் ரூபா 12,923,496 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 12,250,503 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக வழங்கல் மற்றும் உபகரணச் செலவினம் ரூபா 662,993 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்குரியதாக 2016 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 1,102,177 தொகையான நானாவித செலவினங்கள் உரிய ஒவ்வொரு செலவினத்தை தலைப்புக்களிலும் வரவு வைத்து கடன்கொடுத்தோராக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) கெஸெல்வத்த மற்றும் தந்திரிமுல்ல போன்ற உப அலுவலகங்களில் 2015 சனவரி 01 இல் உள்ளவாறு முறையே ரூபா 95,074 மற்றும் 75,628 தொகை மின்சார உபகரண மீதியொன்று காணப்பட்டதுடன் அவைகள் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், களஞ்சிய பேரேடுகளில் விநியோகித்தல்களாகக் காண்பிக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மின்சார பராமரிப்புச் செலவினம் ரூபா 170,702 தொகை குறைத்தும் மின்சார களஞ்சிய மீதிகள் அப்பெறுமானத்தால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) கெஸெல்வத்த மற்றும் தந்திரிமுல்ல போன்ற உப அலுவலகங்களில் 2015 சனவரி 01 இல் உள்ளவாறு முறையே ரூபா 2,433 மற்றும் ரூபா 17,717 தொகை பொதுக் களஞ்சிய மீதியொன்றாக இருந்ததுடன் அவை மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், களஞ்சியப் பேரேடுகளில் விநியோகித்தல்களாகக் காண்பிக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் செலவினம் ரூபா 20,150 இனால் குறைவாகவும் பொதுக் களஞ்சிய மீதி அந்த அளவினால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

4 கணக்கு விடயங்களுக்குரிய கணக்குகளின் பிரகாரம் மீதி ரூபா 144,063,209 ஆக இருந்ததுடன் அவற்றுக்குரிய பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 70,008,816 ஆனமையால் ரூபா 74,054,393 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் கூட்டுமொத்தமாக ரூபா 74,482,581 தொகையான 4 கணக்கு மீதிகளைக் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பல வருடகாலமாக அறவிடப்படாது முன்கொண்டுவரப்படுகின்ற வீதிவிளக்கு மானிய மீதி ரூபா 7,437,096 ஆகவும், முற்செலுத்தப்பட்ட மீதிகள் ரூபா 1,717,893 ஆகவும் வைப்புக்கள் ரூபா 1,500,000 ஆகவும் இருந்தன.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்**

இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய காசோலைகளுக்காக கொடுப்பனவு செய்வதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கிக்

கணக்கிணக்கத்தில் ரூபா 22,139 தொகையான 08 காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 74,790,834 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 37,292,601 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 நிலுவை வருமானம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 118,863,458 நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 ஆதனவரி

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 19,596,648 தொகையான நிலுவையொன்று காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 7,770,549 தொகை அதாவது 40 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்காக ஆதனவரி பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானம் ரூபா 21,555,930 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அதில் ரூபா 12,156,203 தொகை அதாவது 56 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(iii) ஒட்டுமொத்த நிலுவை ஆதனவரி மீதியில் 22 சதவீதம் அதாவது ரூபா 4,738,336 தொகை 5 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியாகும். ஆதனவரி அலகுகளின் எண்ணிக்கை 4678 ஆக இருந்ததுடன் ஒட்டுமொத்த நிலுவையில் 42 சதவீதம் அதாவது ரூபா 8,891,510 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட பழையதாக இருந்ததுடன் அதற்குரிய அலகுகளின் எண்ணிக்கை 12091 ஆகும்.

#### 2.2.3 வியாபார நிலைய வாடகை

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 4,127,084 நிலுவையொன்று காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 537,697 தொகை அதாவது 13 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்காக வியாபார நிலைய வாடகை பற்றுச்சீட்டிடல் ரூபா 2,288,370 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,323,760 தொகை அதாவது 58 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(iii) மொத்த நிலுவை வருமானத்தில் 16 சதவீதமான வியாபார நிலைய வாடகையின் ஒட்டுமொத்த அறவிடலின் செயல்முன்னேற்றம் 29 சதவீதமான கீழ் மட்டப் பெறுமதியைக் கொண்டிருந்தது.

**2.2.4 காணி விற்பனையின் அடிப்படையிலான வரி**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரச்சட்டததில் காணி ஏல விற்பனையின் போது ஏலமிடப்படுகின்ற காணிகளின் விற்பனை விலையில் 1 சதவீதமான வருமானமொன்று சபையினால் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாது சபையின் வருமானக் கட்டுப்பாட்டாளரினால் தயாரிக்கப்பட்ட மொத்த மதிப்பீட்டில் ஒரு சதவீதமான தொகையாக ரூபா 3,559,808 தொகை 11 காணி விற்பனைகளிலிருந்து 2015 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்ததுடன் மொத்த மதிப்பிட்டிற்கும் சந்தை விற்பனைப் பெறுமதிக்குமிடையேயான வேறுபாட்டை சீராக்கி எஞ்சிய பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டணம்**

2014 திசெம்பர் 12 ஆந் திகதிய 1893 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் பாணந்துறை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 2015 ஆம் ஆண்டிற்கான விளம்பர அறிவித்தல் / காட்சிப்படுத்தல் சுற்றாடலுக்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் விதித்தல் தொடர்பான அறிவுறுத்தல்களின் பிரகாரம் பிரதேச சபை எல்லைக்குள் விளம்பர அறிவித்தல்களை நிர்மாணித்தல் மற்றும் காட்சிப்படுத்துதல் என்பவற்றுக்காக அதில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வின் போது 2016 சனவரி 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பௌதீகப் பரிசோதனையின் பிரகாரம் பாணந்துறை பிரதேச சபையின் வாத்துவ உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் மாத்திரம் உரியவர்களிடமிருந்து கட்டணம் அறவிட வேண்டிய 51 விளம்பர அறிவித்தல்கள்/ பெயர்ப் பதாதைகளுக்காக உரிய கட்டணத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையினால் சபைக்கு மீளாய்வாண்டின் போது கிடைக்கப் பெறாதிருந்த வருமானம் ரூபா 462,570 ஆகும்.

**2.2.6 வியாபார வரி**

(i) மீளாய்வாண்டின் ஆம் ஆரம்பத்தில் ரூபா 723,831 தொகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 207,360 அதாவது 29 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்கான பற்றுச்சீட்டில் ரூபா 3,084,281 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,921,771 தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்தது.

(iii) ஆண்டின் போது பற்றுச்சீட்டிடப்பட்ட வியாபார வரியை அவ்வாண்டின் போதே அறவிட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யாமையின் காரணமாக ஆண்டின் இறுதியில் நிலுவை வியாபார வரி ரூபா 1,678,981 மீதியொன்று காணப்பட்டது.

**2.2.7 கைத்தொழில் வரி**

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 224,210 நிலுவையொன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 132,610 தொகை அதாவது 59 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்கான பற்றுச்சீட்டிடல் ரூபா 599,460 ஆக இருந்ததுடன் அதில் ஆண்டின் போது ரூபா 462,910 தொகை அதாவது 77 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.8 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 67,571,727 தொகையொன்று கீழே குறிப்பிட்ட பிரகாரம் கிடைக்க வேண்டியிருந்தது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 5,940,903 |
| முத்திரைக் கட்டணம் | 61,630,824 |

### 2.2.9 முச்சக்கர வண்டி தரிப்பிடக் கட்டணம்

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் முச்சக்கர வண்டி தரிப்பிடங்கள் கணிசமான எண்ணிகையில் காணப்பட்ட போதிலும், அந்த தரிப்பிடங்களில் இருந்து கட்டணம் அறவிடுவதற்காக சபையினால் உப விதிகள் விதித்து சட்டரீதியாகப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வாகனக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 4 வாகன விபத்துக்களுக்காக காப்புறுதி நட்டஈட்டை விஞ்சி சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா ரூபா 81,339 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) சபைக்குச் சொந்தமான வாகனங்களை பழுதுபார்க்கும் போது (விஷேடமாக என்ஜின் பழுதுபார்த்தல்) அது தொடர்பாக பொறியியலாளரின் சிபாரிசு தேவையாக இருந்த போதிலும் ரூபா 535,794 தொகையான வாகனங்களைப் பழுதுபார்த்தல் / உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்தல் தொடர்பாக அவ்வாறான பொறியியலாளரின் சிபாரிசு பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையினால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட சபையின் வாகனங்கள் தொடர்பான பட்டோலையின் பிரகாரம் 06 வாகனங்கள் காணப்படுகின்ற இடமொன்றைக் கண்டுபிடிக்க முடியாதெனக் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த வாகனங்களின் இருப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சபை தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரமொன்று தற்போது ஓட முடியாதிருந்தமையும், 03 டேலர்கள் மற்றும் டேலர்களில் அகற்றப்பட்ட 03 இரும்புத் துண்டங்கள் என்பன வாத்துவ பிரதான அலுவலக வளவில் துருப்பிடிக்கக்கூடிய நிலைக்கு உட்பட்டிருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

மரணமடைந்த, பனியிட மாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற ஊழியர்களிடமிருந்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 187,198 தொகையான கடன் மீதியை கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 20 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

(அ) மொரட்டுவ மாநகர சபையின் உறுப்பினராக செயற்படுகின்ற இரண்டு ஊழியர்கள் சபையில் சேவையில் இல்லாதிருக்கும் போது கையொப்ப பதிவேட்டில் கையொப்பம் இட்டு அலுவலகத்திலிருந்து வெளியே சென்று மீண்டும் மாலை வேளையில் வருகை தந்து கையொப்பம் இட்டுச் செல்கின்றமை நாளாந்தம் நடைபெற்று வருகின்றமையும், கைவிரல், அடையாள இயந்திரத்தில் கையொப்பம் இடாதிருந்தமையும் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்த கெஸெல்வத்த உப அலுவலகத்தின் பணிப்பொறுப்பு உத்தியோகத்தரினால் 2015 மார்ச் 11 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே 2015 பெப்ரவரி 18 ஆந் திகதி முதல் கெஸெல்வத்த உப அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்ட சாரதியொருவர், எந்த ஒரு தினத்திலும் அலவலகத்தில் இல்லாதிருந்ததுடன் சபையில் எந்த ஒரு கடமையும் அவரால் நிறைவேற்றப்படாதிருந்தமையும் அவர்களின் சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக சிபாரிசினை வழங்க முடியாதிருந்ததாகவும் 2015 செப்தெம்பர் 16 ஆந் திகதிய கடிதத்தில் பணிப்பொறுப்பு உத்தியோகத்தரால் சபையின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் அந்த ஊழியருக்கு 2015 பெப்ரவரி 09 ஆந் திகதி முதல் 2015 ஒக்தோபர் வரை ரூபா 348,173 தொகையான சம்பளமும் படிகளும் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியனர் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு இருந்தது.

| | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | மிகை | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| பதவிநிலை | 01 | 01 | - | - |
| இரண்டாம் | 59 | 53 | 01 | 07 |
| கனிஷ்ட | 173 | 168 | 02 | 07 |
| | 233 | 222 | 03 | 14 |

**3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4(1) ஆம் பிரிவின் பிரகாரம் எந்தவொரு பணிக்காகவும் வழங்கப்பட வேண்டிய முற்பணம் மொத்த மதிப்பீட்டின் 20 சதவீதத்தை விஞ்ச முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணானதாக 2015 யூலை 27 ஆந் திகதி நிர்மாண மேற்பார்வை மற்றும் மதியுரைச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் 50 சதவீதம் அதாவது ரூபா 69,500 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பாணந்துறை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் எந்தவொரு ஆயுர்வேத மருந்தகமோ அல்லது சிகிச்சை நிலையமோ காணப்படாத போதிலும் புளத்சிங்ஹல பிரதேச சபைக்கு நியமிக்கப்பட்டிருந்த ஆயுர்வேத வைத்தியரொருவர் 2015 ஏப்ரல் மாதம் 21 ஆந் திகதியிலிருந்து வாரத்திற்கு 03 நாட்கள் பாணந்துறை பிரதேச சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

2012 சனவரி 05 ஆந் திகதிய 1/2012 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக நேரடியாக ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது உரிய சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் 03 ஒப்பந்தங்களுக்கு மேற்பட்ட அளவில் ஒரே தடவையில் ஈடுபட முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக ஒரே காலப் பகுதியில் 02 சங்கங்களினால் 04 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) வாகனக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) மனித வள முகாமைத்துவம்